இந்தச் செப்பேட்டில்தான் புத்தருக்கு முதல் வணக்கம் செலுத்தும் புதிய முறையைக் காணமுடிகிறது. மற்ற பாண்டிய செப்பேடுகளில் இதுபோன்ற அமைப்பு முறையில்லை.

இச்செப்பேடு திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டைக்கு அருகிலுள்ள ஆய்குடி என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஆய்குடி அரசனால், வழங்கப்பட்டது. இவனும் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவனே. இந்த ஊர், ஒரு பேரரசின் தலைநகராக இருந்ததற்குரிய ஒரு சாட்சியமும் இன்றைக்கு இல்லாமல் போனது மிகவும் துரதிருஷ்டவசமானது. ஒரு பழங்கோயில், ஒரு கல்வெட்டு, ஒன்று கூட இவ்வூரின் பெருமையை நிரூபிக்கக் கிடைக்கவில்லை. ஒரு தலைநகருக்குரிய அடிப்படைத் தகுதிகளாக, ஒரு பெரிய நதிக்கரையில் அமைந்த ஊராகவோ, மலைகள் சூழ்ந்த பெரும் பாதுகாப்பு அரண் கொண்ட நகராகவோ இவ்வூர் இல்லை. இருப்பினும் இது பாண்டியர்களின் தலைநகராக இருந்துள்ளது.

புறநானூறு, ஆய்குடி, பொதிகை மலையின் அடிவாரத்தில் இருந்ததாகத் தெரிவிக்கிறது.

**செப்பேட்டு செய்திகள் (வரிகள் 1 முதல் 30 வரை)**

ஓம். அனைத்துச் செயல்களும் நன்றாக நடக்கட்டும். யார் ஒருவன் முழு மகிழ்ச்சியோடு இருக்கின்றானோ, யார் கற்பக மரம் போல பலருக்கும் நன்மை செய்கின்றானோ, அவன் செல்லும் பாதை இருளை அகற்றும் சூரியன் போல் இருக்கும். உலகத்தில் ஏற்கனவே ஒரு மேருமலை (இமயமலை) இருந்தது. மற்றொரு மேருமலை போல, உலகில் உதித்த சுத்தோதனனின் மகன் (கௌதம புத்தர்) மூவுலகங்களையும் காக்கட்டும்.

தன்னையே இயற்கை என்று பெருமையாக நினைப்பது, நெற்றியில் விபூதியோ, திருமண்ணோ இட்டுக் கொண்டு வலம் வருவது, முக்கியமல்ல. தர்மத்தை எந்தவித தடங்களும் இன்றி கடைபிடிப்பதும், உலகின் அனைத்து அறிவையும் பெறுவதே சிறப்பு. புத்த தர்மத்தையும், புத்த சங்கத்தையும் இந்த பூமித்தாய் தனது இரண்டு கண்களாகப் பாவித்து, கெட்ட சமயங்களை (சைவம், வைணவம்) இந்த பூமியிலிருந்து இருளை நீக்குவது போல நீக்கினாள்.